**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: DVC.12/2023**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஷோபிகாதேவி | Caste | : |
| Father 's Name / Husband Name | : தனபாண்டியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(18.04.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். மனுதாரர் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தின் மீது கொடுத்த புகார்மனு மீதான மதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ,1 ஆகவும், மேற்படி ம.சா.ஆ.1 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ,2 ஆகவும், மனுதாரர் கடந்த 14.03.2023ம் தேதி மதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவுக்கான மனு ரசீது அசல் ம.சா.ஆ,3 ஆகவும், எதிர்மனுதாரர்கள் மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் 07.08.2023ம் தேதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் Crl.OP(MD) No.14986/2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் ம.சா.ஆ,4 ஆகவும், மதுரை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் 15.04.2024ம்

தேதி  மதுரை உயர்நீதிமன்ற கிளையின் Crl.MP(MD) No. 4184/2024 மற்றும் Crl.OP (MD) No.14986/2023ன் படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் ம.சா.ஆ,5 ஆகவும், கடந்த 17.08.2022ம் தேதி எனது பெயரில் ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிளை டெலிவரி எடுத்ததற்கான டெலிவரி பில் நகல் ம.சா.ஆ. 6 ஆகவும், மனுதாரர் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது மதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கான முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ7 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டு குறியிடு செய்யப்படுகிறது ம.சா.ஆ. 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.